செ.வெ.எண்.71 நாள்:27.04.2017

பத்திரிக்கை செய்தி — திருநெல்வேலி மாவட்டம்

**திருநெல்வேலி கூடங்குளம் அனுமின் நிலைய சுற்று வட்டார மேம்பாடுத் திட்டத்தின் கீழ் 40 பயனாளிகளுக்கு இலவச வீட்டிற்கான நிலுவைத் தொகை வழங்குவதற்கான உத்தரவினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடங்குளம் அனுமின் நிலைய சுற்று வட்டார மேம்பாட்டுத்திட்டத்தில் இலவச வீடுகள் கட்டும் திட்ட பணிகளுக்கு நிலுவைத் தொகைக்கான உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.04.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் 40 பயனாளிகளுக்கு நிலுவைத் தொகைக்கான உத்தரவினை இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பத்துரை அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.விஷ்ணு,இ.ஆ.ப., இராதாபுரம் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நடராஜன், திரு.சிவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.